(සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved)

# Km/Km/Al-Mazhar Girls' High School - Nintavur

## பாடசாலை மட்ட இரண்டாம் தவணைக்கணிப்பீடு - 2024

## புவியியல்

புள்ளிகள்

சுட்டெண்.................. **தரம் : 11** நேரம் : 3.00 மணித்தியாலம்

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

**01 முதல் 10 வரையான வினாக்களுக்கு தரப்பட்டுள்ள இடைவெளிக்குப் பொருத்தமான விடைகளை அடைப்புக்குள்ளிருந்து தெரிந்தெடுத்து புள்ளிக் கோட்டில் எழுதுக.**

1. புவி வளிமண்டலத்திலுள்ள வாயுக்களில் 78 சதவீதத்தினைக் கொண்டுள்ள வாயு ................................ ஆகும். (ஒட்சிசன் / நைதரசன் / காபணிரொட்சைட்டு)

2. ஓசோன் படை காணப்படும் வளிமண்டலப் படை ...................... மண்டலம் என்பதாகும். (மாறன் / இடை / படை)

3. புவியோட்டிலிருந்து மூடியைப் வேறுபடுத்தும் எல்லை .................................. தொடர்ச்சியின்மை என அழைக்கப்படுகின்றது. (கூற்றன்போர்க் / லேமன் / மோஹோறோவிசிக்)

4. கடல் மட்டத்திலிருந்து மேலே செல்லும் ஒவ்வொரு 1000 மீற்றருக்கும் $6.4^0C$ வெப்பநிலை வீழ்ச்சியடைவதனை ................................ எனப்படும். (வெப்ப நழுவு வீதம் / வளிமண்டல வெப்பநிலை / வெப்பநிலை வீழ்ச்சி)

5. இலங்கைத் தீவு .............................................. புவித்தகட்டில் அமைந்துள்ளது, (பசுபிக் / இந்தோ – அவுஸ்திரேலிய / யூரேசியன்)

6. கிறனைட் பாறையானது ................................ வகையைச் சேர்ந்ததாகும். (அடையற் பாறை / உருமாறிய பாறை / தீப்பாறை)

7. 2024 இல் உலகில் அதிகூடிய சனத்தொகையைக் கொண்டுள்ள முதலாவது நாடு ...................... ஆகும். (இந்தியா / சீனா / இந்தோனேசியா)

8. வட அமெரிக்காவின் சக்ரமென்டோ ஆற்றுப்பள்ளத்தாக்கில் ........................... அதிகளவில் விளைவிக்கப்படுகின்றது. (கோதுமை / சோளம் / நெல்)

9. ஆற்றங் கரையோரங்களில் காணப்படும் மண் ...................................... ஆகும். (செங்கபில நிற மண் / வண்டல் மண் / செம்மஞ்சள் பொடசோல் மண்)

10. ஹோட்டன் சமவெளி ஒரு ........................................ ஆகும். (பாதுகாக்கப்பட்ட வனம் / தேசிய பூங்கா / சரணாலயம்)

**★ 11 தொடக்கம் 15 வரை தரப்பட்டுள்ள கூற்றுக்களை வாசித்து, அவை சரியாயின் "ச" இனையும் பிழையாயின் "பி" இனையும் சுற்றி வட்டமிடுக.**

11. பாறைகளின் அடர்த்தி, அமைப்பு மற்றும் அதன் அமைவிடத்தின் அடிப்படையில் புவியோடானது சீயல் படை, சீமாப் படை என இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்படுகின்றது. ச / பி
12. உலகில் அதிகளவில் நெல்லினை உற்பத்தி செய்யும் பிரதேசங்களில் இத்தாலியின் போ நதிப் பள்ளத்தாக்கும் ஒன்றாகும். ச / பி
13. பண்டாக் கரடி, துருவமான், துருவக்கரடி போன்ற விலங்குகள் அயன மண்டல மழைக்காடுகளில் காணப்படுகின்றன. ச / பி
14. அண்மைக்காலத்தில் இலங்கையில் மோட்டார் வாகன உதிரிப்பாகங்களை ஒன்றிணைக்கும் கைத்தொழில் வளர்ச்சியடைந்து வருகின்றது. ச / பி
15. இலங்கை முழுவதனையும் சுற்றுலாச் சபையினால் ஏழு சுற்றுலா வலயங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ச / பி

*** 16 தொடக்கம் 20 வரையிலான வினாக்களில் "அ" மற்றும் "ஆ" ஆகிய இரு நிரல்கள் தரப்பட்டுள்ளன. அவ்விரு நிரல்களுள் "அ" நிரலுக்கு ஏற்ப "ஆ" நிரலைப் பொருத்தினால் வரும் சரியான விடைகளைக் குறித்து நிற்கும் இலக்கத்தினைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

16. உலகிலுள்ள சில மலைத்தொடர்கள் **"அ"** நிரலிலும் அவை காணப்படும் கண்டங்கள் **"ஆ"** நிரலிலும் தரப்பட்டுள்ளன. சரியான விடையினைத் தெரிவு செய்க.

| "அ" | "ஆ" |
|---|---|
| 1. இமய மலை | A – ஆபிரிக்கா |
| 2. றொக்கி மலை | B – தென் அமெரிக்கா |
| 3. அந்தீஸ் மலை | C – வட அமெரிக்கா |
| 4. அட்லஸ் மலை | D – ஆசியா |

1. ABCD   2. CBAD   3. BCDA   4. DCBA   (……….)

17. பௌதிக அம்சங்கள் சில **"அ"** நிரலிலும் அவற்றின் இயல்புகள் **"ஆ"** நிரலிலும் தரப்பட்டுள்ளன. இவற்றை சரியாகப் பொருத்தினால் வரும் விடையினைத் தெரிவு செய்க.

| "அ" | "ஆ" |
|---|---|
| 1. மடகஸ்கார் | A – நதி |
| 2. அமேசான் | B – எரிமலை |
| 3. ரிட்டிக்கா | C – தீவு |
| 4. ஹெக்லா | D – ஏரி |

1. ABDC   2. ACBD   3. CADB   4. CABD   (……….)

18. இலங்கையிலுள்ள பொருளாதார நடவடிக்கைகள் சில **"அ"** நிரலிலும் அவை பரம்பியுள்ள பகுதிகள் **"ஆ"** நிரலிலும் தரப்பட்டுள்ளன. சரியான விடையினைத் தெரிவு செய்க.

| "அ" | "ஆ" |
|---|---|
| 1. பால் உற்பத்தி | A – சிலாபம் |
| 2. சிறு ஏற்றுமதிப் பயிர் செய்கை | B – குருநாகல் |
| 3. உவர் நீர் மீன்பிடிக் கைத்தொழில் | C – மாத்தளை |
| 4. தென்னைப் பயிர்செய்கை | D – அம்பேவல |

1. DACB   2. CADB   3. CDAB   4. DCAB   (……….)

19. பயிர்கள் சில **"அ"** நிரலிலும் அவற்றினை செய்கை பண்ணுவதற்கு சாதகமான மண் வகைகள் **"ஆ"** நிரலிலும் தரப்பட்டுள்ளன. சரியான விடையினைத் தெரிவு செய்க.

| "அ" | "ஆ" |
|---|---|
| 1. நெல் | A – ஈரக் களிமண் |
| 2. கோதுமை | B – உவர்த்தன்மையான மணல் மண் |
| 3. தேயிலை | C – வண்டல் மண் |
| 4. தென்னை | D – சேணாசம் மண் |

1. DACB   2. CDAB   3. BADC   4. CDBA   (……….)

20. தேசப்படங்களுடன் தொடர்புடைய சில தகவல்கள் **"அ"** நிரலிலும் அவற்றிற்குப் பொருத்தமான நிறங்கள் **"ஆ"** நிரலிலும் தரப்பட்டுள்ளன. சரியான விடையினைத் தெரிவு செய்க.

| "அ" | "ஆ" |
|---|---|
| 1. நதி | A – கபில நிறம் |
| 2. சமவுயரக் கோடு | B – கறுப்பு நிறம் |
| 3. குடியிருப்புக்கள் | C – சிவப்பு நிறம் |
| 4. பிரதான வீதி | D – நில நிறம் |

1. DABC 2. CBAD 3. CDBA 4. BADC (.........)

***** 21 தொடக்கம் 24 வரையிலான வினாக்களின் இடைவெளிகளுக்குப் **பொருத்தமான சொற்களை** இட்டுப் பூரணப்படுத்துக.

21. மாறன் மண்டலத்தின் மேல் எல்லையினை ................................ எல்லை என அழைக்கப்படும்.

22. தாவரங்களிலிருந்து நீரானது .................................... மூலம் வளிமண்டலத்தினைச் சென்றடைகின்றது.

23. இலங்கையில் இறப்பர் ஆராய்ச்சி நிலையம் .................................... எனும் இடத்தில் அமைந்துள்ளது.

24. குறிப்பிட்ட ஒரு விசேட காரணியை அல்லது அம்சத்தினை விளக்குவதற்கோ, எடுத்துக் காட்டுவதற்கோ அமைக்கப்பட்ட படம் .................................... தேசப்படம் ஆகும்.

*** 25 முதல் 40 வரையான ஒவ்வொரு வினாவுக்கும் தரப்பட்டுள்ள நான்கு விடைகளுள் சரியான அல்லது மிகவும் பொருத்தமான விடையினைத் தெரிவு செய்து அதற்குரிய இலக்கத்தினை உரிய புள்ளிக்கோட்டில் எழுதுக.**

25. 1:50000 எனும் அளவுத்திட்டத்தில் இலங்கை முழுவதற்கும் எத்தனை படங்கள் வரையப்பட்டன.
1. 94 2. 92 3. 82 4. 88 (.........)

26. இலங்கையின் தேயிலையினை கொள்வனவு செய்யும் பிரதான நாடுகள் அமைந்துள்ள வலயம்
1. மத்திய கிழக்கு 2. மேற்கு ஐரோப்பா 3. ஆபிரிக்கா 4. கிழக்காபிரிக்கா (.........)

27. ------------ எனும் குறியீட்டினால் காட்டப்படும் பண்பாட்டு அம்சம் யாது?
1. சிறு வீதி 2. ஒற்றையடிப் பாதை
3. நீர்ப்பாசனக் கால்வாய் 4. ஜீப்வண்டிப் பாதை (.........)

28. இலங்கையில் கஹட்டகா, போகல சுரங்கங்களில் அகழ்ந்தெடுக்கப்படும் கனிய வளம் யாது?
1. இல்மனைட் 2. வெண்களி 3. காரீயம் 4. இரத்தினக்கல் (.........)

29. எரிபொருள் கனியம் மற்றும் உலோகக் கனியம் ஆகியவற்றினை உள்ளடக்கும் விடையினைத் தெரிவு செய்க.
1. நிலக்கரி – மங்கனீஸ் 2. பெற்றோலியம் - காரீயம்
3. பொஸ்பேற்று – சுண்ணக்கல் 4. இரும்பு – மணல் (.........)

30. உலகில் வடக்கு மற்றும் தெற்காக $30^0$ – $50^0$ அகலக் கோட்டுக்கு இடையிலான பிரதேசங்களில் காணப்படும் காடுகள்
1. அயன மண்டல மழைக் காடுகள் 2. ஊசியிலைக் காடுகள்
3. மலைக் காடுகள் 4. இடைவெப்ப வலயக் காடுகள் (.........)

31. இலங்கையின் மொத்த நிலப்பரப்பு ஏறக்குறைய,
1. 64610 சதுர கிலோ மீற்றர்களாகும். 2. 65610 சதுர கிலோ மீற்றர்களாகும்.
3. 66610 சதுர கிலோ மீற்றர்களாகும். 4. 63610 சதுர கிலோ மீற்றர்களாகும். (.........)

32. இலங்கையில் பரந்தளவில் தரைக்கீழ் நீரின் இருப்புக் காணப்படும் இடம் பின்வருவனவற்றில் எது?
1. வணாத்து வில்லு முருங்கன் தாழி 2. மட்டக்களப்புக் கரையோரம்
3. புத்தளம் களப்பு 4. யாழ்ப்பாணக் குடாநாடு (.........)

33. கண்டங்களின் எல்லையிலிருந்து சமுத்திரத்தை நோக்கி பரந்துள்ள ஆழம் குறைந்த கடற்பரப்பு,
1. கண்டச் சாய்வு 2. ஆட்புல எல்லை
3. கண்ட மேடை 4. மேற்கூறிய எதுவுமில்லை

34. ஒளித்தொகுப்புச் செயற்பாட்டிற்குப் பயன்படும் வாயு,
1. காபனீரொட்சைட் 2. ஓட்சிசன் 3. நைதரசன் 4. ஐதரசன்

35. ஒஸ்ரின் மில்லர், தோண்வைட், கெப்பன் ஆகியோருடன் தொடர்புடையது,
1. பூகோள விவசாயப் பாகுபாடு 2. பூகோள காலநிலைப் பாகுபாடு
3. பூகோள இயற்கைத் தாவரப் பாகுபாடு 4. பூகோள வெப்பநிலை அதிகரிப்பு

36. இலங்கையில் வலுவினை உற்பத்தி செய்யும் சக்தி மூலங்களில் பிரதானமானது எது?
1. பெற்றோலியம் 2. நிலக்கரி 3. நீர் 4. உயிர்த்திணிவு

37. மகோகணி, தேக்கு, அக்காசியா, ஹொரா, கீனா போன்ற தாவரங்கள் காணப்படும் காடுகள் எவ்வாறு அழைக்கப்படுகின்றன.
1. அயன மண்டல மழைக் காடுகள் 2. இடைவெப்பவலயக் காடுகள்
3. ஊசியிலைக் காடுகள் 4. பாலைவனக் காடுகள்

38. மூடுபனியும், மழைப்பனி வீழ்ச்சியும் நிலவும் காலநிலை வகை யாது?
1. இடைவெப்பக் காலநிலை 2. அயனக் காலநிலை
3. மலைக் காலநிலை 4. துந்திராக் காலநிலை

39. பின்வருவனவற்றில் வர்த்தகப் பயிர் அல்லாதது,
1. தேயிலை 2. இறப்பர் 3. நெல் 4. தென்னை

40. 1: 50000 அளவுத்திட்ட இடவிளக்கவியல் படங்களில் நிலத்தில் ஒரு கிலோ மீற்றர் தூரம் படங்களில் எத்தனை சென்ரி மீற்றர்களில் காட்டப்பட்டிருக்கும்.
1. ஒரு சென்ரி மீற்றர் 2. இரண்டு சென்ரி மீற்றர்
3. மூன்று சென்ரி மீற்றர் 4. நான்கு சென்ரி மீற்றர்

(40 x 1 = 40 புள்ளிகள்)

**★ இவ் வினாத்தாள் பகுதி I, பகுதி II எனும் இரு பகுதிகளைக் கொண்டது.**

**★ பகுதி I (முதலாம் வினா) கட்டாயமானதாகும்.**

**★ பகுதி II இல் மொத்தமாக 06 வினாக்கள் உள்ளன. அவற்றில் 04 இற்கு விடையளித்தல் வேண்டும்.**

**முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக.**

**1:50000 அளவுத்திட்ட இடவிளக்கப்படத்தின் ஒரு பகுதி வழங்கப்படும்.**

## பகுதி I

01. (அ) தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள 1:50000 அளவுத்திட்ட இடவிளக்கப் படத்தினைப் நன்கு அவதானித்து பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

★ இல (i) முதல் (v) வரையான வினாக்களுக்கு பொருத்தமான விடையினை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.

(i) நாற்பக்கல் A இனால் காட்டப்படும் பௌதிக அம்சம் யாது?
(மலைத்தொடர் / தனிக்குன்று / மணல் மேடு)

(ii) படத்தில் C – D கோட்டினால் காட்டப்படும் இடவிளக்கவியல் அம்சம் யாது?
(ஆற்றுப் பள்ளத்தாக்கு / சுவடு / திரிகோண கணித நிலையம்)

(iii) நாற்பக்கல் B இல் காணப்படும் பிரதான பயிற்செய்கை நடவடிக்கை யாது?
(இறப்பர் / நெல் / சேனை)

(iv) படத்தில் ஹெபொலஓயா (Hepolaoya) நீர்த்தேக்கத்தினூடாக குறித்துக்காட்டப்பட்டுள்ள நிர்வாக எல்லை யாது?
(மாகாண எல்லை / மாவட்ட எல்லை / பிரதேச செயலகப் பிரிவு எல்லை)

(v) படத்தில் E இனால் காட்டப்படும் சமய வழிபாட்டிடம் யாது?
(பௌத்த கோயில் / இந்துக் கோயில் / பள்ளிவாசல்)

(vi) படத்தின் மத்திய பகுதியில் செய்கை பண்ணப்பட்டுள்ள பயிர் யாது?
(வீட்டுத்தோட்டம் / சேனைப்பயிர் / பிறபயிர்)

(vii) படத்தில் F என அடையாளமிடப்பட்டுள்ள அம்சம் யாது?
(பிரதான வீதி / அணைக்கட்டு / நீர்ப்பாசனக் கால்வாய்)

**பின்வரும் வினாக்களுக்கு சரியாயின் "சரி" எனவும் பிழையாயின் "பிழை" எனவும் எழுதுக.**

(viii) இப்பிரதேசத்தின் அதிகூடிய உயரம் கிட்டத்தட்ட 480 மீற்றர் ஆகும்.

(ix) இப்பிரதேசத்தில் பயிற்செய்கை நடவடிக்கைகள் மழை நீரின் உதவியுடன் இடம்பெறுகின்றன.

(x) படப்பிரதேசத்தின் தென் பகுதியில் காடுகளும், பற்றைக் காடுகளும் அதிகளவில் காணப்படுகின்றன.

(10X1=10 புள்ளிகள்)

(ஆ) (i) தொடக்கம் (v) வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்கும் எதிரே மூன்று ஆங்கில எழுத்துக்கள் தரப்பட்டுள்ளன. சரியான விடையைக் குறிக்கும் எழுத்தினை வழங்கப்பட்டுள்ள உலகப் புறவுருவப் படத்திலிருந்து தெரிவு செய்து எழுதுக.




| | | |
|---|---|---|
| (i) | புளோரிடா குடா நாடு - W, X, Y | |
| (ii) | ஈரான் - N, O, P | |
| (iii) | மாலை தீவுகள் - R, S, T | |
| (iv) | அமேசான் காடுகள் - K, L, M | |
| (v) | சிட்னி நகரம் - B, C, D | (5x 1 = 5 புள்ளிகள்) |

(இ) (i) தொடக்கம் (v) வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்கும் எதிரே மூன்று ஆங்கில எழுத்துக்கள் தரப்பட்டுள்ளன. சரியான விடையைக் குறிக்கும் எழுத்தினை வழங்கப்பட்டுள்ள இலங்கை புறவுருவப் படத்திலிருந்து தெரிவு செய்து எழுதுக.

| | | |
|---|---|---|
| (i) | பருத்தித்துறை முனை – G, H, J | |
| (ii) | ஆனைவிழுந்தான் சரணாலயம் - A, B, C | |
| (iii) | விக்டோரியா நீர்த்தேக்கம் - K, L, M | |
| (iv) | பொத்துவில் - O, P, R | |
| (v) | கட்டுநாயக ஏற்றுமதிச் செயன்முறை வலயம் - D, E, F | (5 x 1 = 5 புள்ளிகள்) |



## பகுதி II

02. (i) உயிர்க் கோளம் என்றால் என்ன. (2 புள்ளிகள்)
    (ii) உயிர்க்கோளத்தின் பிரதான இரண்டு கூறுகளையும் பெயரிடுக. (2 புள்ளிகள்)
    (iii) நீரியல் வட்டத்தின் பிரதான கட்டங்களில் இரண்டினைப் பெயரிடுக. (2 புள்ளிகள்)
    (iv) வளிமண்டலத்தின் முக்கியத்துவங்கள் இரண்டினைக் குறிப்பிட்டு அவற்றில் ஒன்றினை விளக்குக. (4 புள்ளிகள்)

03. (i) இலங்கையில் பின்வரும் இயற்கை வளங்கள் காணப்படும் இடங்கள் ஒவ்வொன்றினையும் அவற்றுடன் தொடர்புடைய உற்பத்திகள் ஒவ்வொன்றினையும் பெயரிடுக.
    (அ) இரத்தினக்கல்
    (ஆ) கனிய மணல் (4 புள்ளிகள்)

    (ii) இலங்கையில் குடிசைக் கைத்தொழிலுடன் தொடர்புடைய உற்பத்திகள் மூன்றினைப் பெயரிடுக. (3 புள்ளிகள்)
    (iii) இலங்கையில் குடிசைக் கைத்தொழிலுடன் தொடர்புடைய பிரச்சினைகள் இரண்டினைக் குறிப்பிட்டு அவற்றில் ஒன்றினை சுருக்கமாக விளக்குக. (3 புள்ளிகள்)

04. (i) இறப்பர் பயிற்செய்கைக்குச் சாதகமான காரணிகள் இரண்டினைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

(ii) உலகில் இறப்பர் பயிற்செய்கையில் ஈடுபடும் நாடுகள் இரண்டினைப் பெயரிடுக. (2 புள்ளிகள்)

(iii) உலகில் நெற்பயிற்செய்கை இடம்பெறும் ஆற்றுப் பள்ளத்தாக்குகள் இரண்டினைப் பெயரிடுக. (2 புள்ளிகள்)

(iv) நெற்பயிற்செய்கையின் விஷேட பண்புகள் மூன்றினைக் குறிப்பிட்டு விளக்குக. (4 புள்ளிகள்)

05. (i) மண் எவ்வாறு உருவாகின்றது என்பதனை குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

(ii) மண்ணின் உருவாக்கத்தில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் நான்கினைகக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

(iii) பாறைகளை அவற்றின் தோற்றத்தின் அடிப்படையிலான பிரதான வகைப்பாடுகள் மூன்றினையும் பெயரிடுக. (3 புள்ளிகள்)

(iv) மண் வளத்தினைப் பாதுகாப்பதற்கு மேற்கொள்ளக் கூடிய நடவடிக்கைகள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக. (3 புள்ளிகள்)

06. (i) இலங்கையில் அயன மண்டல மழைக்காடுகள் பரவியுள்ள பிரதேசங்கள் இரண்டினைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

(ii) அயன மண்டல மழைக்காடுகளின் பண்புகள் இரண்டு தருக. (2 புள்ளிகள்)

(iii) காட்டுவளம், வனசீவராசிகள் ஆகியவற்றைப் பாதுகாப்பதற்கு இலங்கை அரசு மேற்கொண்டு வருகின்ற நடவடிக்கைகள் மூன்று தருக. (3 புள்ளிகள்)

(iv) காடுகள் மற்றும் வனசீவராசிகளைப் பாதுகாப்பதனால் கிடைக்கும் நன்மைகள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக. (3 புள்ளிகள்)

07. (i) மோட்டார் வாகனக் கைத்தொழிலுடன் தொடர்புடைய பிரதான ஆசிய நாடுகள் மூன்றினைப் பெயரிடுக. (3 புள்ளிகள்)

(ii) மோட்டார் வாகனக் கைத்தொழிலின் அண்மைக்காலப் போக்குகள் மூன்றினைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

(iii) கைத்தொழில் அமைவிடத்தில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் மூன்றினைக் குறிப்பிட்டு அவற்றில் ஒன்றினை விளக்குக. (4 புள்ளிகள்)




SCALE 1 : 50,000

සමෝච්ච රේඛා අන්තරය මීටර 20

சமவுயரக்கோட்டு இடைவெளி 20 மீற்றர்

Contour Interval 20 metres

(1)

இரண்டாம் தவணைப் பரீட்சை – 2024

புவியியல் (61)

தரம் - 11

விடைகளும் புள்ளித்திட்டமும்

*வினாத்தாள் - I........................40 X1 = 40 புள்ளிகள்*

*வினாத்தாள் - II*

*பகுதி I*

*வினா இல. 01 = 20 புள்ளிகள்*

*பகுதி II*

*4 X10 = 40 புள்ளிகள்*

*மொத்தம் =100 புள்ளிகள்*

## வினாத்தாள் - *I*

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | *நைதரசன்* | 2. | *படை* | 3. | *மோஹோரோவிசிக்* | 4. | *வெப்ப நமுவுவீதம்* | 5. | *இந்தோ – அவுஸ்திரேலியா* |
| 6. | *தீப்பாறை* | 7. | *இந்தியா* | 8. | *நெல்* | 9. | *வண்டல் மண்* | 10. | *தேசிய பூங்கா* |
| 11. | *ச* | 12. | *ச* | 13. | *பி* | 14. | *ச* | 15. | *ச* |
| 16. | *4* | 17. | *3* | 18. | *4* | 19. | *2* | 20. | *1* |
| 21. | *மாற்றரிப் பெல்லை* | 22. | *ஆவியுயிர்ப்பு* | 23. | *அகலவத்தை* | 24. | *கருப் பொருட்படம்* | 25. | *2* |
| 26. | *மத்திய கிழக்கு* | 27. | *2* | 28. | *3* | 29. | *1* | 30. | *4* |
| 31. | *2* | 32. | *1* | 33. | *3* | 34. | *1* | 35. | *2* |
| 36. | *4* | 37. | *1* | 38. | *4* | 39. | *3* | 40. | *2* |

*(40 X1= 40 புள்ளிகள்)*

## *வினாத்தாள் - II*

01. (அ) (i) தனிக் குன்று

(ii) ஆற்றுப் பள்ளத்தாக்கு

(iii) நெல்

(iv) பிரதேச செயலகப் பிரிவு எல்லை

(v) பௌத்தகோயில்

(vi) வீட்டுத் தோட்டம்

(vii) அணைக்கட்டு

(viii) பிழை

(ix) சரி

(x) சரி

(10 *X1= 10 புள்ளிகள்)*

(ஆ) (i) X

(ii) N

(iii) S

(iv) M

(v) D

(5 *X1= 5 புள்ளிகள்)*

(இ) (i) H
(ii) E
(iii) C
(iv) P
(v) F *(5 X1= 5 புள்ளிகள்)*

02. (i) புவியுடன் தொடர்ச்சியான இடைத்தொடர்புகளைக் கொண்டிருக்கும் தாவரம் மற்றும் விலங்குகள் போன்ற யாவற்றையும் ஒன்றிணைக்கின்ற உயிர்ச் சூழலியல் தொகுதி
(ii) உயிருள்ள கூறுகள்
உயிரற்ற கூறுகள்
(iii) ஆவியாக்க ஆவியுயிர்ப்பு, பனிபடு நிலை, ஒடுங்கல், படிவுவீழ்ச்சி
(iv) ஒளித்தொகுப்பு
சுவாசம்
வளிமண்டலத் தோற்றப்பாடுகள் (படிவு வீழ்ச்சி, வெப்பநிலை, அமுக்கம், காற்று, ஈரப்பதன்)
புற ஊதாக் கதிர்களிலிருந்து பாதுகாத்தல் (ஓசோன் படை)
வானொலிச் சமிக்சைகளின் பரிமாற்றங்கள் இடம்பெறல் போன்றவை (விளக்கம்)
(3 + 2 + 2 + 3 = 10 புள்ளிகள்)

03. (i) (அ) இரத்தினபுரி
(ஆ) புல்மோட்டை

(ii) கைத்தறி நெசவு, தும்பு உற்பத்திகள், பதனிடப்பட்ட உற்பத்திகள், அலங்காரப் பொருட்கள், பற்றிக் துணி, பாய், பெட்டி, மண்பாண்டம், பித்தளைப் பொருட்கள், தூரிகைப் பொருட்கள், வீட்டுத் தளபாடங்கள், பிரம்பு உற்பத்திகள், முகமூடி, பின்னல் பொருட்கள்
(iii) மூலப்பொருள் பற்றாக்குறை
தொழிலாளர் பற்றாக்குறை
பதிலீட்டுப் பொருட்களின் இறக்குமதி
உற்பத்திச் செலவு அதிகம்
உற்பத்தியை சந்தைப்படுத்தல் தொடர்பான பிரச்சினை
(விளக்கம்)
(4 + 3 + 3 = 10 புள்ளிகள்)

04. (i) $27^0$ C வரையான சராசரி வெப்பநிலை
2000 மில்லி மீற்றர் வருடாந்த மழைவீழ்ச்சி
செம்பூரான் மண்
300 மீற்றருக்குக் குறைவான உயரமுடைய மென்சாய்வான பிரதேசம்
பயிற்றப்பட்ட தொழிலாளர்
சந்தை வாய்ப்பு
போக்குவரத்து வசதிகள்

(ii) இலங்கை, இந்தியா, தாய்லாந்து, மலேசியா, இந்தோனேசியா, வியட்நாம். சீனா

(iii) இத்தாலி போ நதி
அவுஸ்திரேலியா மறேடாலிங் நதி
ஆபிரிக்கா நைல் நதி (எக்ப்து)
வட அமெரிக்கா மிசூரி மிசிசிப்பி, சக்ரமெண்டோ பள்ளத்தாக்குகள் (ஐக்கிய அமெரிக்கா)

(iv) - நிலப்பரப்புகள் சிறியவை
- ஊழியச் செறிவு கொண்டது
- சுயதேவை, வர்த்தக அடிப்படையிலான உற்பத்தி
- இரசாயன / சேதன வளமாக்கிப் பயன்பாடு
- புதிய விதையினங்களின் அறிமுகம்
- விசேட நெல்லினங்களின் அறிமுகம் (பசுமைப் புரட்சி)
- நவீன சந்தைப்படுத்தல் முறைகள் (விளக்கம்)

(2 + 2 + 2 + 4 = 10 புள்ளிகள்)

4 ஏப்ரல் (2)

05. (i) சேதனப் பொருட்கள் நீண்ட காலமாக உக்குவதனாலும், பாறைகள் வானிலையாலழிதலுக்கு உட்படுவதனாதலும் பெறப்படுகின்ற சிதைவடைந்த பொருட்கள் கலப்பதனால் மண் உருவாகின்றது

(ii) தாய்ப்பாறை, காலநிலை, தரைத்தோற்றம் (இடவிளக்கவியல்), காலம், தாவரங்களினதும் விலங்குகளினதும் பகுதிகள், மானிட செயற்பாடுகள்

(iii) தீப்பபாறை, அடையற்பாறை, உருமாறிய பாறை

(iv) காடாக்கம், SALT முறை, மூடுபயிர் வளர்த்தல், கலப்புப் பயிற் செய்கை, படிமுறைப் பயிற் செய்கை, விவசாயக் கழிவுகளினை நிலத்தில் இடல்

(2 + 2 + 3 + 3 = 10 புள்ளிகள்)

06. (i) தெதியகல, சிங்கராஜ வனம், கன்னெலியா, நாகியா தெனியா, ரஹுணுகந்த, கிலீமலே, எரத்ன, மொறபிட்டிய

(ii) கரும் பச்சை நிறத்தில் காணப்படல்
பல படைகளைக் கொண்டிருத்தல்
கீழ் வளரிகள் காணப்படல்
இடையிடையே மரங்கள் காணப்படல்

(iii) வன ஜீவராசி ஒதுக்குகள் உருவாக்கப்பட்டுள்ளமை
- தேசிய பூங்காக்கள்
- சரணாலயங்கள்
- இயற்கை ஒதுக்குகள்
- வன ஒதுக்குகள்
- தடைவிதிக்கப்பட்ட ஒதுக்குகள்

(iv) பார்க்க தரம் 11, பக்கம் 45

(2 + 2 + 3 + 3 = 10 புள்ளிகள்)

07. (i) சீனா, ஜப்பான், இந்தியா, தென்கொரியா, தாய்லாந்து

(ii) பார்க்க தரம் 10, பக்கம் 115 மற்றும் 116

(iii) – சக்தி மற்றும் வலு
- மூலப் பொருள்
- போக்குவரத்து
- சந்தை வாய்ப்பு
- முதலீடு அல்லது மூலதனம்
- உழைப்பு அல்லது ஊழியம்
- உட்கட்டமைப்பு வசதிகள்
- அரச கொள்கை

(3 + 3 + 4 = 10 புள்ளிகள்)